**வறுமை மதிப்பீட்டு முன்னேற்றச் செயற்திட்டம் - 2016 மார்ச் 24 தொடக்கம் 2017 மார்ச் 31 வரை**

வறுமை மதிப்பீட்டு முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2016 மார்ச் 24 தொடக்கம் 2017 மார்ச் 31 வரையிலான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிக்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆந் திகதிய ரீஎப் 018397 ஆம் இலக்க புள்ளிவிபரவியல் இயலுமையை கட்டியெழுப்புதல் மானியத்திற்கான நம்பிக்கை நிதியத்தின் 2.05(இ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தகவல் திரட்டுவதை முன்னேற்றுவதற்கும், ஊழியப்படையை முன்னேற்றுவதற்கும் ஊழியப்படை அளவை மற்றும் வீட்டுரிமையாளர் வருமானம் செலவின அளவைகளின் மாதிரி எடுத்தல் மற்றும் வினாக்கொத்து வடிவமைப்புக்களை முன்னேற்றுவதற்கும் வதிவிடத் துறையினருக்கான வரைவிலக்கணத்தை நாளதுவரையாக்குவதற்குமாக தொழில்நுட்ப பயன்பாட்டினை வேகப்படுத்துவதனூடாக வறுமை அளவீட்டை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 23.91 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 160,000 ஆக உள்ளதுடன் செயற்திட்டத்தின் முழுமையான கிரயத்தினையும் சர்வதேச அபிவிருத்திக் கழகம் வழங்குவதற்கு இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 மார்ச் 24 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2017 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான

அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமாவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் போன்றவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பது,

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் வழங்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்றும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2017 மார்ச் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **மூலம்** | **மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு** | **2017 மார்ச் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள்** | |
|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மிலலியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஐடீஏ | 0.16 | 23.91 | 23.56 | 0.15 | 22.58 |
| **மொத்தம்** | 0.16 | 23.91 | 23.56 | 0.15 | 22.58 |

மேற்குறிப்பிடப்பட்ட தகவலின் பிரகாரம், ரூபா 23.91 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 160,000 ஆன ஒதுக்கீட்டில் ரூபா 22.58 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 151,217 ஆன தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 1.33 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 8,783 ஆன பயன்படுத்தப்படாத மானியப் பெறுகைகள் 2017 மே 22 இல் நன்கொடை முகவருக்கு மீள நிதியளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீகச் செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் கனணி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணல்கள் மாதிரி எடுத்தல் மற்றும் வடிவமைப்புக்களை பயன்படுத்தி தரவுகளை வேகமாக திரட்டுவதையும், வதிவிடத்துறையினருக்கான வரைவிலக்கணத்தை நாளதுவரையாக்குதலை அமுல்படுத்துவதற்குமாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தொழிநுட்ப அணுகல் தேவைகளுக்காக தொழிநுட்ப உதவிக்கு மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், பட்டியல்படுத்தப்பட்டதிற்கு இணங்க 2016 திசெம்பர் 27 இல் உள்ளவாறு முக்கிய வெளிப்படுத்தல்கள் பூரணப்படுத்த முடியாமையினால் செயற்திட்டக் காலப்பகுதி 2017 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

--------------------------------------------

திட்டத்தினுடைய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 06 மாதம் கடந்த பின்னர், கனணி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணல்கள் முறைமை மூலம் தகவல்களைக் சேகரிப்பதற்கு ரூபா 4.65 மில்லியன் கிரயத்தில் 90 டெப்லட் கனணிகளினைக் கொள்வனவு செய்வதற்கு திட்டத்தினால் 2016 செப்தெம்பர் மாதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. டெப்லட் கனணிகளுக்காக விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்ட குறிப்புரைகள் அதைத்தொடர்ந்து மாற்றப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய, திணைக்களத்தின் விஷேட தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட விலை மனுதாரரினால் 2016 நவம்பர் 23 ஆம் திகதி ஒப்பந்தம் பூரணப்படுத்தப்பட்டது.